DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 122/2025**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயராஜ் | Father Name – | ஜங்கால் நாயக்கர் |
| Age | 59 | Village – | ராமகிருஷ்ணாபுரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2026.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கை யார் யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். 1ம் வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் தாய்மாமா. 1ம் வாதி அரசாங்கத்திடமிருந்து உரிமம் பெற்று துப்பாக்கி வைத்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் யாரிடமிருந்து வழக்குரை சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சுப்பிரமணிய செட்டியாரின் வாரிசுகளான வேணுகேபால் செட்டியார் மற்றும் மற்ற வரிசுகளிடமிருந்து கிரையம் வாங்கினோம். சுப்பிரமணிய செட்டியாரின் வாரிசுகளை குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும்.

2. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் எங்களுக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கு வழக்குரை சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. நாங்கள் கிரையம் வாங்கும்போது வழக்குரை சொத்தில் வீடு இருந்ததா என்றால் வீடு இருந்தது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் விவசாய உபயோகத்திற்காக கட்டப்பட்ட மனை பராமரிப்பற்கு இடிந்து காலியிடமாக உள்ள மேற்படி மனை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரை சொத்தை எந்த வருடம் கிரையம் வாங்கினோம் என்றால் அது சரியாக நியாபகம் இல்லை. வழக்குரை சொத்தை கிரையம் வாங்கும்போது அளந்து வாங்கினோமா என்றால் அளந்து

பார்த்து தான் வாங்கினோம். அவ்வாறு அளந்து பார்க்கும்போது எந்த நில அளவையர் வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. வழக்குரை சொத்தில் இருந்த வீட்டிற்கு வீட்டு வரி ரசீது செலுத்தி வருகிறோமா என்றால் செலுத்தி வருகிறோம். அவ்வாறு செலுத்திய வீட்டு வரி ரசீதுகளை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கேட்காததால் தாக்கல் செய்யவில்லை. வழக்குரை சொத்தில் உள்ள வீட்டிற்கு நாங்கள் வீட்டு வரி செலுத்தவில்லை என்றும், அதனால் தான் எங்களால் வீட்டுவரி ரசீதை தாக்கல் செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.61. வழக்குரை சொத்தின் நான்குமால் என்ன என்றால் வடக்கு பக்கம் கரட்டுப்பட்டி பாண்டியன் காப்பி தோட்டம் உள்ளது, தெற்கு பக்கம் போடிநாயக்கனூர் வாத்தியார் நிலம் உள்ளது, மேற்கு பக்கம் போடிநாயக்கனூர் வாத்தியார் நிலம் உள்ளது, கிழக்கு பக்கம் வனத்துறைக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது.

4. நான் சொல்வதுபோல் வழக்குரை சொத்தின் நான்குமால் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் வாங்கும்போது நாங்கள் மேற்படி சொன்ன நான்குமாலின் அடிப்படையில் தான் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நான் சொன்ன நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வழக்குரை சொத்தை 1ம் வாதியும் அவரது மகன்களும் தான் பராமரித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும் 3, 4 வாதிகளும் வழக்குரை சொத்தில் விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15 ஆவணத்தில் 27.01.2025ம் தேதி கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணத்தில் 1ம் வாதியின் பெயர் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணம் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணத்தில் ஏலமும் மிளகும்

இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரை சொத்தில் காப்பி உள்ளதா என்றால் தற்போது காப்பி இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.16 வழக்கறிஞர் அறிவிப்பில் " மேற்படி நடுமி ஜக்கமா நாயக்கர் கொடுக்கப்பட்ட சர்வே எண் மற்றும் நான்குமால் தவறாக பதிவு செய்து வாங்கியுள்ளார் என்றும், மேலும் மேற்படி நிலம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக எமது கட்சிக்காரர் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், மேற்படிநிலததை அளவீடு செய்ய வேண்டுமென்றால் நடுமிஜக்கமாநாயக்கர் முறையாக நான்குமால் மாறுதல் செய்த பின்பு அளவீடு செய்ய வேண்டும் என்றும்" சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வழக்குரை சொத்து அகமலை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.17 ஆவணம் 28.01.2026ம் தேதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஆவணத்தில் 2021 முதல் 2026ம் ஆண்டு வரை ஒரே ரசீதில் வரி செலுத்தப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ரசீதில் அண்ணாநகர் 2வது வார்டில் உள்ள சொத்திற்கானது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ரசீதில் கதவு எண்.637 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஆவணம் வழக்குரை சொத்தில் இருக்கும் வீட்டிற்கானது அல்ல என்றால் சரியல்ல. 3, 4 வாதிகள் எனது உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். நான் 3, 4 வாதிகளுக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான்.

7. வேணுகோபால் வகையறாவை விசாரணை செய்தால் வழக்குரை சொத்து உண்மையில் அவர்களுக்கு பாத்தியப்பட்டு இருந்ததா என்று தெரியவரும் என்றால் சரிதான். எந்த வருடத்தில் இருந்து 1ம் வாதியும் அவரது மகன்களும் வழக்குரை சொத்தில் விவசாயம் செய்து வருவதாக சொல்கிறேன் என்றால் சுமார் 7 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறார்கள். சுமார் 7 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறார் என்பதை நிரூபணம் செய்ய 7 வருடங்களுக்கான அடங்கல் கணக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள்

மீது 1ம் வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி பிரதிவாதிகளை வழக்குரை சொத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று தான் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, 1ம் வாதி மற்றும் அவரது மகன்கள் வழக்குரை சொத்தில் விவசாயம் செய்து வருவதை தடுக்ககூடாது என்று புகார் கொடுத்தார்.

8. 1ம் வாதி வழக்குரை சொத்தில் பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருவதை இடைஞ்சல் செய்ததால் தான் சுமார் இரண்டு வருடங்களாக எங்களுக்கு பிரச்சனை இருந்து வருகிறது என்றால் எங்களுக்குள் சுமார் 5 வருடங்களாக பிரச்சனை இருந்து வருகிறது, 1ம் வாதியை விவாசயம் செய்து வருவதை தடுத்ததால் பிரச்சனை இருந்து வருகிறது. காவல் நிலையத்தில் எந்த வருடத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக கொடுக்கப்பட்டது. போடிநாயக்கனூரிலிருந்து வழக்குரை சொத்திற்கு நடந்து செல்ல வேண்டும் என்றால் எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 2 ½ மணி நேரம் ஆகும். வழக்குரை சொத்தில் உள்ள வீட்டை 1ம் பிரதிவாதி 2011ம் ஆண்டு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், அந்த வீட்டில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

9. 1ம் பிரதிவாதி 2011ம் ஆண்டில் சர்வே எண்.62க்கு கட்டுப்பட்ட சொத்தையும் வழக்குரை சொத்து கட்டுப்பட்டடுள்ள நான்குமாலுக்குட்பட்ட சொத்தையும் சேர்த்து கிரையம் வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் காலம் கடந்து இரண்டு வருடங்களுக்கு முன்பாக வழக்குரை சொத்திற்கு சென்று பிரதிவாதிகளை வெளியேற்ற முயற்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 1ம் வாதியும் அவரது மகன்களும் எந்த காலத்திலும் வழக்குரை சொத்தில் விவசாயம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. வழக்குரை சொத்து எந்த ஆண்டுவரை சப்புக்காடாக இருந்தது என்றால் சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்புவரை சப்புக்காடாக தான் இருந்தது. வழக்குரை சொத்தை நாங்கள் பெயரளவில் தான் கிரையம் பெற்றுள்ளோம் என்றும், எந்த காலத்திலும் வழக்குரை சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல.

வழக்குரை சொத்தை பொறுத்து எங்கள் மூல உரிமையாளருக்கு உரிமை இல்லை என்றும், பெயரளவில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து ஏமாற்றி உத்தரவு பெற்று பிரதிவாதிகளை வெளியேற்ற இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தை பொறுத்து எங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.08.13 17:18:32 +0530

District Munsif,
Bodinayakanur.